
# திராவிடத்தால் வாழ்கிறோம்

847

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

# உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

111

# ‘கொள்கை உரம்’ குறள்மணி!
## சு.வன்னியப்பெருமாள்




**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சு.வன்னியப்பெருமாள் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

1924-ஆம் ஆண்டில், கேரள மாநிலத்தில் தந்தை பெரியார் அவர்கள் தலைமையேற்று நடத்திய, வரலாற்றில் இடம்பெற்ற **‘வைக்கம் போராட்டம்’** நடைபெற்றது.

அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த குமரி மாவட்டத்தில் இருந்து ஏராளமானவர்கள் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டத்தில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பள்ளி மாணவனாகக் கலந்துகொண்டு, அரசியல் களத்துக்கு வந்தவர் சு.வன்னியபெருமாள். ‘சுயமரியாதை இயக்கம்’, ‘திராவிடர் கழகம்’, ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என அவரது அரசியல் பயணத்தில், பெரியாருடனும், அண்ணாவுடனும், கலைஞருடனும் பயணித்த முன்னோடி. தமிழ்நாட்டின் தென்கோடி முனையில் கழக அரசியலை உயர்த்திப் பிடித்த முன்னோடி உடன்பிறப்புகளில் ஒருவர் சு.வன்னியப்பெருமாள்.

குமரி மாவட்டம் - கண்ணன்புதூர் கிராமத்தில், 1910-ஆம் ஆண்டில் பிறந்தவர் வன்னியப்பெருமாள். பெற்றோர் சுப்பு - மாரிமுத்தம்மாள். பக்கத்து ஊரான செண்பகராமன்புதூரிலுள்ள பள்ளியில் பத்தாம் வகுப்புவரை படித்து முடித்தார். தமிழில் நன்கு புலமை பெற்ற வன்னியப் பெருமாள், திருக்குறளில் ஆழங்கால்பட்டவராகத் தன்னை வளர்த்துக் கொண்டார்.

### சுயமரியாதை இயக்கத் தொடர்பு

பள்ளியில் படிக்கும்போதே தந்தை பெரியார் அவர்களின் மேடைப் பேச்சுகளைக் கேட்கத் தொடங்கியதுடன், ‘விடுதலை’ நாளேட்டில் பெரியாரின் எழுத்துகளால் ஈர்க்கப்பட்டார். அதைத் தொடர்ந்து, திராவிடர் கழகத்தில் ஈடுபடுத்திக் கொண்டு, பகுத்தறிவுச் சிந்தனையுடன் சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டார்.

இவர் பத்தாவது படித்துக் கொண்டிருந்த காலத்தில்தான், **‘வைக்கம் போராட்டம்’** நடைபெற்றது. வைக்கத்துக்கு பெரியார் வருகிறார் என மிகத் தீவிர பிரச்சாரம் செய்யப்பட்டபோது, முன்னோடித் தோழர்களுடன் இணைந்து பிரச்சாரங்களில் ஈடுபட்டவர்.

அப்போதெல்லாம், கிராமப் பகுதிகளுக்குப் பேருந்துகள் கிடையாது. அந்தப் பகுதிகளுக்கான பிரச்சாரங்களுக்குச் செல்வது எனில், சைக்கிள் அல்லது மாட்டுவண்டிப் பயணங்கள்தான். கழக முன்னோடிகளுடன் இவர் மாட்டு வண்டியை வாடகைக்கு வைத்துக்கொண்டு, அதில் ஒலிபெருக்கியைப் பொருத்தி, கிராமங்களில் ஆர்வத்துடன் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்து, அண்ணா செயல்படத் தொடங்கிய காலம் தொட்டே, கழகத்தில் பல பொறுப்புகளை ஏற்று, சிறப்பாகச் செயல்பட்டவர். 1949-ஆம் ஆண்டு ஜூலையில், ‘திராவிட நாடு’ வெளியிட்ட ‘கண்ணீர் துளிகளை சிந்திய தோழர்கள்’ பட்டியலில் வன்னியப்பெருமாளும் இருந்தார். கழகம் தொடங்கப்பட்ட காலத்திலேயே, நாஞ்சில் மாவட்டக் கழக முன்னோடிகள் வி.எம்.ஜான், பி.எம்.கண்ணு, கி.மனோகரன் உள்ளிட்டோருடன் இணைந்து மாவட்டக் கழகப் பணிகள் தொடங்கி, தனது ஊரான கண்ணன்புதூரில் கிளைக் கழகத்தைத் தொடங்கி, கிளைக் கழகப் பணிமனையின் பொறுப்பாளராக இருந்தவர்.

அன்றைய நாஞ்சில் மாவட்டச் செய்திகளைப் பதிவு செய்துள்ள ‘மாலைமணி’, ‘திராவிடநாடு’, ‘நம்நாடு’ ஏடுகளில் தொடர்ச்சியாக நாஞ்சில் மாவட்டக் கழகச் செய்திகளில் வன்னியப்பெருமாள் பங்குபெற்ற செய்திகள் இடம்பெற்றுள்ளன.

### போரணியில் தளபதிகள்

1955-ஆம் ஆண்டு, கழக அமைப்புத் தேர்தலில், வெற்றிபெற்றவர்களை, ‘திராவிட நாட்டுப் போரணியின் தளபதிகள்’ என பட்டியலிட்டது, 21.4.55 தேதியிட்ட ‘திராவிட நாடு’. அதில், சி.பி.சிற்றரசு தலைமையில் நடைபெற்ற, நாஞ்சில் மாவட்டக் கழகத் தேர்தலில், பொதுக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 பேரில் மூத்தவர் வன்னியப்பெருமாள்தான். கழகத்தின் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் வாக்கு பெற்றவராக இருந்தார் வன்னியப்பெருமாள்.

1956-ஆம் ஆண்டில் மொழிவாரி மாநிலம் அமைந்தபோது, தாய்த் தமிழ்நாட்டுடன் தென் திருவிதாங்கூர் பகுதியை இணைக்க வேண்டும் என்கிற போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. போராட்டத்துக்கு ஆதரவளித்து கழகத்தின் சார்பில், குமரி மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் நீதிமன்ற முற்றுகை அறப்போராட்டத்தை அறிவித்தார் அண்ணா.

> **“பெரியாரின் தொண்டராகப் பொதுப்பணியைத் தொடங்கி, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக கழகக் கொள்கை உரமேறி, ஓய்வின்றிக் கழகத்திற்கு உழைத்தவர் வன்னியப்பெருமாள்.”**

அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, ‘நாஞ்சில் நாடு தமிழருக்கே’ என நீதிமன்றத்தின் முன்பு அறப்போர் மறியலில் ஈடுபட்டு, 110 பேர் கைதாகினர். வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட 20 பேரில் வன்னியப்பெருமாளும் ஒருவர். மறியல் வெற்றிகரமாக நடைபெற தோழர்கள் வி.எம்.ஜான், இரெ.இளம்வழுதி, மதுரை முத்து, தூத்துக்குடி நடராசன், வன்னியப்பெருமாள் ஆகியோர் பொறுப்பேற்று நல்ல முறையில் நடத்தி வைத்தனர் என தலைமைக் கழகம் வெளியிட்ட ‘தி.மு.க. வரலாறு’ நூல் பதிவு செய்துள்ளது.

### போராட்டக் களங்கள்

‘1957 கருப்புக் கொடி காட்டும் போராட்டம்’, ‘1964 சட்ட நகல் எரிப்புப் போராட்டம்’, ‘மிசா நெருக்கடி கால கைது’ என கழகத்தின் அத்தனைப் போராட்டங்களிலும் கொள்கை மறவராக நின்றார் இந்த மூத்த முன்னோடி. அண்ணாவுக்குப் பின்னர் கலைஞரைத் தலைவராக ஏற்றுக்கொண்ட, கழக மூத்தவர்களில் ஒருவராக இருந்தார் வன்னியப்பெருமாள்.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் கழகப் பணியே இலக்கு என்று இருந்த இவரை, கலைஞர் தனது ஆட்சிக்காலத்தில், ‘மாநில கதர் மற்றும் குடிசைத் தொழில் வாரிய’ உறுப்பினராக நியமனம் செய்தார். இவர் இதன் மூலம், நாகர்கோவில் வட்டாரத்தில், முறைசாரா தொழிலாளர்களுக்கு இயன்றவரை பல உதவிகளைக் கொண்டு சேர்த்தார்.

### சுயமரியாதைத் திருமணங்கள்

சமூகக் கட்டுப்பாடுகள், சாதிய ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த நாஞ்சில் மாவட்டப் பகுதியில், கழகத்தினருடன் சேர்ந்து இவர் நிகழ்த்திய சாதி ஒழிப்புப் போராட்டங்கள் வீச்சானவை. குமரி மாவட்ட அளவில், ஏராளமான சுயமரியாதைத் திருமணங்களை நடத்தி வைத்தவர். கலப்புத் திருமணங்கள், விதவைத் திருமணங்களை, நூற்றுக்கணக்கில் முன்னின்று நடத்தியுள்ளார். மூத்த முன்னோடியாக இளைஞர்களை வழிநடத்திய வன்னியப் பெருமாள், கோட்டாற்றில் ஓர் இரவுப்பள்ளியைத் தொடங்கி, மாணவர்களுக்குப் பள்ளிப்பாடங்களைச் சொல்லிக்கொடுத்ததுடன் மட்டுமின்றி, சுயமரியாதைக் கருத்துகளையும் கொண்டு சேர்த்தார்.

திருவள்ளுவர் மன்றம் தொடங்கி, குறள்நெறியை மக்களுக்குக் கொண்டு சேர்க்கும் பணியினையும் வன்னியப்பெருமாள் தொடர்ச்சியாகச் செய்து வந்தார். அதன்வழியாக ‘குமரி குறள்மணி’ என்கிற அடையாளமும் அவருக்குச் சேர்ந்தது.

வன்னியப்பெருமாள் அவர்களின் பெரும் பணிகளைப் போற்றும் வகையில், 1994-ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும் விருதுகளில், ‘பெரியார் விருது’ அளித்து பெருமை சேர்த்தது கழகம். ‘பெரியாரின் தொண்டராகப் பொதுப்பணியைத் தொடங்கி, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக கழகக் கொள்கை உரமேறி, ஓய்வின்றிக் கழகத்திற்கு உழைத்தவர்’ என வன்னியப்பெருமாள் குறித்து, முத்தமிழறிஞர் கலைஞர் சொன்ன வார்த்தைகள் கழக வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

...துடிக்கும்

## அம்பலமாகும் அமலாக்கத் துறையின் உள்நோக்கங்கள்!

டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில், அமலாக்கத்துறை சோதனை செய்த விவகாரத்தில், அமலாக்கத்துறை எல்லை மீறிச் செல்கிறது என்று குட்டு வைத்து, விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது உச்சநீதிமன்றம். இதுதொடர்பாக, “அமலாக்கத்துறை செயல்படும் லட்சணம் இதுதான்” என யூடியூபர் விக்னேஷ் ஆனந்த் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

“1.சேலத்தில் 450 ரூபாய் தனது வங்கிக் கணக்கில் இருந்ததற்காக இரண்டு விவசாயிகளுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியது. தமிழ்நாட்டில் பா.ஜ.க., அ.தி.மு.க. நீங்கலாக எல்லாக் கட்சிகளும் போராடியதால், அமலாக்கத்துறை பின்வாங்கியது.

2.கேரள பத்திரிகையாளர் உ.பி.யில் நடந்த பாலியல் கொடூரத்தை செய்தியாக்கச் சென்றபோது, அம்மாநில காவல்துறை கைது செய்தது. தொடர்ந்து அவரை சிறையில் வைப்பதற்காக, அவர் 5,000 ரூபாய் ஜி.பே செய்ததைக் காரணம் காட்டி, பணமோசடித் தடுப்புச் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்தது .

3.சந்திரசேகர் ராவின் மகள் கவிதா பட்டதாரி என்பதால், அவருக்குப் பிணை வழங்கக்கூடாது என்று சொன்ன விசித்திரக் காரணத்தை, நிராகரித்து, உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது.

4.ஈ.சி.ஐ.ஆர். காப்பி இல்லாமல் அரசு அலுவலகங்களில் ரெய்டு செய்கிறது அமலாக்கத்துறை என சென்னை உயர்நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு குற்றம் சாட்டியது. ‘இல்லை, அது சரிதான்’ என்றது, சென்னை உயர்நீதிமன்றம். ஆனால், உச்சநீதிமன்றமோ அது தவறு, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஈ.சி.ஐ.ஆர். குறிப்புகளைக் கொடுக்கவேண்டும் என கொட்டு வைத்தது.

5. மராட்டிய மாநிலத்தில், பா.ஜ.க. எம்.பி. கிரித் சோமையா என்பவரின் ஆபாசப் படக்காட்சிகள் வெளியாகின. அவர் மாநில பெண் உயர் அதிகாரிகளை அமலாக்கத்துறையின் மூலம் ரெய்டு செய்யப்போவதாக மிரட்டி படுக்கைக்கு அழைத்ததாகவும், ஆண் அதிகாரிகளிடம் பணம் வாங்கியதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இன்றுவரை விசாரணை தொடர்கிறது”

என அமலாக்கத்துறையின் பல உள்நோக்கச் செயல்பாடுகளைப் பட்டியலிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்

### குடும்ப விழாக்கள், கழக விழாக்களாக...





புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க.வின் மூத்த முன்னோடி என்னுடைய தந்தை வை.கோ.இராசன். பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கழக உறுப்பினர் அட்டை பெற்றவர். புதுக்கோட்டையின் முதல் ஒன்றியச் செயலாளராகவும், 1986-இல் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் ஒன்றியப் பெருந்தலைவராகவும் செயல்பட்டவர். இன்று 88-வது வயதிலும் கொள்கைப் பற்றுடன் கழகப் பணியாற்றி வருகிறார். 1987-இல் எனது சித்தப்பா மகன், மகள் பூங்கோதை-யோகநாதன், முத்துசாமி-லட்சுமி ஆகியோரது திருமணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 2006-இல் என் சகோதரர்கள் ரெங்கராசு-மணிமேகலை, ரவிச்சந்திரன்-கௌதமி ஆகியோரது திருமணத்தை, பேராசிரியர் தலைமையேற்று நடத்தி வைத்தார். 2012-இல் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், என்னுடைய திருமணம் நடைபெற்றது.



வி.ஜி.ஆர். மணிவண்ணன்

**– வி.ஜி.ஆர்.மணிவண்ணன், அமைப்பாளர், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி, புதுக்கோட்டை வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கழக வரலாறு

### போர் உதவி நிதி!

1962-ஆம் ஆண்டு இறுதியில் இந்திய-சீனப் போரின்போது, கழகத்தின் சார்பாக போர் நிதி அளிப்புக் கூட்டம், டிசம்பர் 2-ஆம் தேதி சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்களிடம் மக்கள் வரிசையாக நின்று பணம் கொடுத்தனர். தாய்மார்கள், வளையல்கள், தோடுகள், மோதிரங்கள் போன்ற தங்க நகைகளையும் பொருட்களையும் அளித்தனர். அன்று ஒருநாள் மட்டும், ரூ.35 ஆயிரம் போர் நிதியாகத் திரட்டப்பட்டது. இந்த நிதி, அன்றைய முதல்வர் காமராசரிடம் கழகத்தின் சார்பில் அளிக்கப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131